TNTJ150000952025

## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு

2026-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 06-ஆம் நாள் சனிக்கிழமை

அசல் வழக்கு எண்.91/2025

**CNR No.TNTJ15-000095-2025**

கஜேந்திரன் வாதி

/எதிராக/

1. வட்டாட்சியர் அவர்கள்,
   திருவையாறு
2. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   தஞ்சாவூர் பிரதிவாதிகள்

வழக்கறிஞர்கள் முன்னிலை

| | | |
|---|---|---|
| வாதிக்காக | : | திரு.P.சின்னமணி |
| பிரதிவாதிகளுக்காக | : | அரசு வழக்கறிஞர் |

**தீர்ப்புரை**

இறந்துபோன மங்களத்துக்கு வாதிதான் வாரிசு என விளம்புகை செய்தும், அதனை தொடர்ந்து தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பித்தும், இன்னுபிற உத்தரவுகளை வாதிக்கு சாதகமாக பிறப்பிக்கக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 17:24:48 +0530

1) **வழக்குரை சுருக்கம்:**

1.1) வாதியின் பெரியம்மா மங்களம் என்பவருக்கு வாரிசு சான்று வேண்டி வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ராமையன்– மங்களம் தம்பதிக்கு திருமணம் நடைபெற்று, மேற்படி திருமண பந்தத்தின் மூலம் எவ்விதமான குழந்தைகளும் இல்லாமல், மேற்படி திருப்பூந்துருத்தி கிராமத்தில் வாழ்ந்து கடந்த 07.09.2007–ம் தேதி ராமையன் இறந்துவிட்டார். அதன்பிறகு ராமையன் மனைவி மங்களம் அவரது கணவரின் அண்ணன் சின்னையன் மகனான வாதியின் அரவணைப்பிலும், பராமரிப்பிலும் இருந்து வந்து மங்களம் கடந்த 14.12.2012–ம் தேதி மேற்படி திருப்பூந்துருத்தி கிராமத்தில் இறந்துவிட்டார்.

1.2) மேற்படி மங்களத்திற்கு உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லாததாலும், தாய் தந்தையர் உயிருடன் இல்லாததாலும் மற்றும் ராமையனின் உடன்பிறந்த சின்னையன் மற்றும் வாதியின் தாய் உயிருடன் இல்லாததாலும் சட்டப்படியான வாரிசுகள் யாரும் இல்லாததால் மேற்படி இறந்துபோன மங்களத்திற்கு வாதிதான் வாரிசு என விளம்புகை செய்ய வேண்டி வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

1.3) வாதி கஜேந்திரன் கடந்த 07.04.2025–ம் தேதியில் திருவையாறு வட்டாட்சியரான 1–ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று கேட்டு தாக்கல் செய்த மனுவை இறந்துபோன மங்களத்திற்கு வாதி நேரடி வாரிசு இல்லை என்ற காரணத்தினால் அன்றைய தினத்தில் மேற்படி மனுவை நிராகரித்து நீதிமன்றம் மூலமாக வாரிசு சான்று பெற்றுக்கொள்ளமாறு



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 17:25:14 +0530

அறிவுறுத்தியுள்ளார் எனவே இறந்துபோன மங்களத்திற்கு வாதிதான் வாரிசு என விளம்புகை செய்யக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>எதிர் வழக்குரை சுருக்கம்:</u>**

வாதியின் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஆகும். இறந்து போன மங்களம் என்பவருக்கு வாதி தான் வாரிசுதாரர் என்பதை தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். இறந்து போன ராமையன் – மங்களம் தம்பதியினருக்கு குழந்தை இல்லாததால் வாதியானவர் நேரடி வாரிசு இல்லை என்பதால் வாரிசு சான்று வழங்கப்படவில்லை.

3) வாதுரைகள் பார்வையிடப்பட்டு கீழ்க்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டுள்ளது.

**<u>எழு வினாக்கள்:</u>**

1. Whether the plaintiff is Legal heir of deceased Mangalam?
2. Whether the plaintiff is entitled to the relief of Declaration as prayed?
3. What other relief for the plaintiff?

**<u>4) சாட்சியங்கள்:</u>**

இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>5) எழு வினாக்கள் 1, 2 மற்றும் 3:</u>**

5.1) வாதியின் தகப்பனாரின் தம்பி மனைவி மங்களம் என்பவருக்கு வாதி மட்டும்தான் சட்ட வாரிசு என்று விளம்புகை செய்ய கோரி அசல்



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 17:25:19 +0530

வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் தகப்பனார் சின்னையன் என்பவரின் உடன் பிறந்த தம்பி ராமையன் என்பவருக்கு மங்களம் என்பவர் மனைவி ஆவார். மேற்படி ராமையன் – மங்களம் தம்பதிக்கு குழந்தை இல்லை என்றும், மேற்படி மங்களம் என்பவரின் பெற்றோர் உயிருடன் இல்லை என்றும், மங்களம் கணவர் ராமையன் இறந்துவிட்டார் என்றும், மேற்படி ராமையனின் அண்ணன் மகனான வாதியின் பராமரிப்பில் மங்களம் வாழ்ந்து வந்ததால் மேற்படி மங்களம் என்பவருக்கு வாதி மட்டுமே சட்ட வாரிசு என்று வழக்குரைக்கப்பட்டுள்ளது.

**இந்து வாரிசுரிமை சட்டம், 1956 பிரிவு 15(1) இறந்து போன இந்து பெண் ஒருவரின் சொத்துக்கள் பிரிவு 16–க்கு உட்பட்டு கீழ்கண்டவாறு சென்றடைய வேண்டும் என்கிறது.**

1. **முதலில் அந்த பெண்ணின் மகன், மகள் (ஏற்கனவே இறந்து போன மகன் அல்லது மகளின் குழந்தைகள்) மற்றும் கணவர்.**
2. **இரண்டாவதாக கணவரின் வாரிசுகள்**
3. **மூன்றாவதாக தாய் மற்றும் தந்தை**
4. **நான்காவதாக தந்தையின் வாரிசுகள்**
5. **இறுதியாக தாயின் வாரிசுகள்**

5.2) இவ்வழக்கில் மங்களம் என்ற இந்து பெண்ணிற்கு குழந்தைகள் இல்லை என்றும் கணவர் உயிருடன் இல்லை என்றும், மங்களத்தின் பெற்றோர் உயிருடன் இல்லை என்றும் வழக்குரைக்கப்பட்டுள்ளது. மங்களத்தின் தந்தையின் வாரிசுகள் பற்றியோ தாயின் வாரிசுகள் பற்றியோ


PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 17:25:25 +0530

வாதி குறிப்பிட்டு கூறவில்லை. மங்களத்தின் கணவரது வாரிசுகள் யார் யார் என்பது பற்றி தெளிவுபடுத்துவதற்கு மங்களத்திற்கு முன்பே இறந்து போன மங்களத்தின் கணவர் ராமையன் என்பவருக்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் ராமையன் என்பவருக்கு மங்களம் தவிர வேறு வாரிசுகள் உள்ளனரா என்றும் தெளிவுபடுத்தப்படவில்லை.

5.3) மங்களம் இறக்கும் வரை வாதியின் அரவணைப்பிலும், பராமரிப்பிலும் இருந்து வந்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 15(1)(b)–ன் படி வாதி மட்டுமே இறந்து போன மங்களம் என்பவரின் கணவரது வாரிசு என்று வாதி தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றும் அதன் அடிப்படையில் வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் தீர்வு காண்கிறேன்.

6) **இறுதியாக வாதியின் வழக்கினை செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கிறேன்.**

இத்தீர்ப்புரை என்னால் வாய்மொழியாக சொல்லப்பட்டு கூகுள் டாக்ஸ் உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (06.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 17:25:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு.

1. வாதித்தரப்பு சாட்சி:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.1 | திரு.கஜேந்திரன் |
| 2 | வா.சா.2 | திரு.ராஜாங்கம் |

2. வாதி தரப்பு சான்றாணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | ராமையன் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| 2 | வா.சா.ஆ.2 | மங்களம் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| 3 | வா.சா.ஆ.3 | வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான குறிப்புரை இணையதள பதிவிறக்க நகல் |
| 4 | வா.சா.ஆ.4 | வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 17:25:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.